# 7

# தேவை கோட்பாடு பற்றிய மார்க்ஸிய நோக்கும் மனித ஆற்றலில் அதன் பங்கும்

- முபிஸால் அபூபக்கர்

## அறிமுகம்

மனித உருவாக்கத்தில் தேவைகளுக்கு ஒரு முக்கிய பங்குண்டு. விலங்குகள் உயிர் வாழ்வதற்கான வழிகளை பெரும்பாலும் தமது உடல்களிலும், உடனடி சுற்றுச் சார்புகளிலும் கொண்டுள்ளன. சில விலங்குகள் தம் சூழலில் உள்ள தாவரங்களை மட்டும் உண்டு உயிர் வாழ்கின்றன. தாவரங்கள் அழிகின்றபோது அவையும் அழிகின்றன. ஆனால் விலங்குகளோடு ஒப்பிடும்போது மனிதர் பலவீனமானவர். தமது தேவைகளுக்கான சாதனங்களை தாமே படைக்கவேண்டிய தேவை அவர்களுக்கு மட்டுமேயுள்ளது.

மனிதரது தேவையுடன் தொடர்புபட்டே மனிதரது தனிப்பட்ட வாழ்வும், வரலாற்று ரீதியான வாழ்வும் தொடங்குகின்றன. தேவைகளைப் பூர்த்தி செய்யவே உழைப்பும் கருவிகளும் கண்டு பிடிக்கப்பட்டன. மானிடத் தேவையென்பது ஒரு செயல், உறவுச் செயல். அது இயற்கையுடனும் இதர மனிதர்களுடனும் புறப்பொருட்களுடனும் மனிதர் கொண்டுள்ள ஒரு சிக்கலான உறவு என்பதையே மார்க்ஸிய சிந்தனை உணர்த்துகின்றது.

ஒரு தேவைக்குப் பொருந்தாத அல்லது தேவையை உருவாக்காத எந்தவொன்றும் மானிட வாழ்வில் இல்லை. மற்ற மனிதர்களின் அகத் தன்மையை அங்கீகரிப்பது ஒரு மானிடச் சமுதாய உண்மையாகும். இதில் மற்றவர்களின் தேவைகளை அங்கீகரிப்பது ஒரு உணர்வுபூர்வமான விடயமாக மாறி விடுகிறது (பார்க்க: Henry Lefebvre, 1974:40).

## மார்க்ஸிய தேவைக் கருத்து

மனித இயல்பைத் தேவையின் செயலாற்றல் மூலம் விபரிக்கவும், மதிப்பிடவும் முடியும் என மார்க்ஸ் கருதுகிறார். மார்க்ஸின் கருத்தில் மனித முன்னேற்றம் என்பது தேவை, செயலாற்றல் இரண்டுக்கு மிடையேயான இடைச்செயலின் விளைவாகும். மேலும், விலங்கு களிலிருந்து மேம்பட்டவர்களாக மனிதரைப் பிரித்துக்காட்டவும் மார்க்ஸ் தேவையைப் பயன்படுத்துகிறார்.

தேவை என்பதை மார்க்ஸ் பரந்த அர்த்தத்தில் பயன்படுத்துகிறார். தேவைகள் ஒவ்வொன்றுக்குமுரிய நோக்கங்களைப் பொறுத்துத்

தேவைகளை வகையீடு செய்வது பிரச்சினைக்குரியது. பொதுவாகத் தேவைகள், அவற்றின் நோக்கங்களையும், அவை எதற்காக ஆற்றப் படுகின்றன என்பதையும் அங்கு இடம்பெறும் நடவடிக்கைகளையும் கொண்டே வகையீடு செய்யப்படுகின்றன. இப்பொருளில் மார்க்ஸின் மிகவும் பொதுவான வகையீடு சடப்பொருள்களுக்கும், ஆன்மீகப் பொருள்களுக்கும் இடைப்பட்டது. அத்துடன் மார்க்ஸ் அரசியல் தேவைகள், சமூக வாழ்வின் தேவைகள், உழைப்புத் தேவைகள் போன்றவற்றையும் குறிப்பிடுகின்றார்.

தேவை வகையீடானது வரலாறு, மெய்யியல், மானிடவியல் ரீதியில் இரு யதார்த்தங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1. இயற்கைரீதியான தேவைகள்
2. சமூகரீதியில் உருவாக்கப்பட்ட தேவைகள்

இதில் முதலாவது உடல் ரீதியான அல்லது கட்டாயத் தேவைகள். இரண்டாவது சமூகத் தேவைகள்.

தேவை எப்போதும் புலனீடான பொருட்களுடன் தொடர்புடையது. தேவை ஒரு புறப்பொருள் நடவடிக்கை என்றும் கூறலாம். மனிதரின் தேவையும், தேவையின் புறப்பொருளும் (Object of The Need) ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. புறப்பொருள்களும் தேவையைக் கொண்டு வருகின்றன. மேலும் இயற்கையில் தேவையின் புறப்பொருள் என்பதை அதன் சொற்பொருளுக்கேற்ற வகையில் சட ரீதியான புறப்பொருள் என்று வரையறுக்கத் தேவையில்லை (Agnes Heller, 1974:41).

மனிதத் தேவையின் உயர்ந்த புறப்பொருள் மற்ற மனிதனாகும். மனிதன் தனது தேவைக்கான பொருள்களைப் படைக்கின்றான். தனக்குத் திருப்தி தரும் கருவிகளைப் படைக்கின்றான். மனித மூலத்தோற்றத்தின் வரலாறு அவனது தேவைகளின் மூலத் தோற்றத்தின் வரலாறாகும் (Karl Marx and Engles, 1976:39,41).

மூலத்தோற்றம் பற்றிய இக்கருத்து “ஜேர்மன் கருத்தியலில்” மார்க்ஸினால் முன்வைக்கப்பட்டது. இத்தேவைகளின் திருப்திக்காக கருவிகளின் உற்பத்தியைச் செய்ததே முதல் வரலாற்றுச் செயலாகும். இந்த புதிய தேவைகளின் உற்பத்தி, முதல் வரலாற்று செயல் என்று கருதப்படுகின்றது.

மனிதத் தேவைகள் புறப்பொருளாக்க நிகழ்வுப் போக்கிலிருந்து வருகிறது. தேவையின் புறப்பொருள் மனிதருக்கு வழிகாட்டுகின்றது. புறப்பொருளாக்க நடவடிக்கை புதிய தேவைகளை உருவாக்குகின்றன. உலக நடவடிக்கையும், தேவை நடவடிக்கையும் ஒன்றுக்கொன்று பரஸ்பர உறவில் செயல்படுவதை மார்க்ஸின் தேவைக் கருத்தாக்கம் உணர்த்துகிறது. மனிதர் தேவைகளினால் உருவாக்கப்படுகின்றனர் என்று இதைக் கூறலாம். தமக்குத் தேவையான உணவு, உடை, உறையுள், சுதந்திரம், உயிர் வாழ்வதற்கான சாதனங்கள் அனைத்தையும்

படைக்க வேண்டிய நிலையில் மனிதர் இருக்கின்றனர். இது விலங்கையும், மனிதரையும் வேறுபிரிக்கும் மற்றொரு இலட்சணமாகவும் அமைகின்றது.

**மனித ஆற்றல்**

ஒவ்வொரு மனிதரும் சில ஆற்றல்களையும், தேவைகளையும் பெற்றிருப்பதாக மார்க்ஸ் கருதுகிறார். சிலவற்றை இயற்கை ஆற்றல்கள் என்றும் சிலவற்றை இன ஆற்றல்கள் என்றும் அவர் வகைப்படுத்தியுள்ளார். மனிதரது ஆற்றல்களும் அவர்களது தேவைகளும் தான் மனிதரைத் தனிப்பட்ட பிரத்தியேக ஜீவியாக்குகின்றன. மார்க்ஸின் நோக்கில் இனஜீவி என்ற கருத்து விலங்கிலிருந்து மனிதரை வேறாக்குகிறது.

மானிட ஆற்றல் என்பது எப்போதும் தேவையென்பதுடன் பிணைக்கப்பட்டுள்ளது. தேவையென்பது "ஆற்றல்" பற்றிய உணர்வை மனிதர் கொள்வதற்கான சாதனம். மனித ஆற்றல் ஒவ்வொன்றும் அதை நிறைவு செய்வதற்கு இன்றியமையாத பொருட்களுக்கான குறிப்பிட்ட தேவையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இத் தேவையே ஆற்றலை அறிந்து கொள்வதற்கும் அதை வளர்ப்பதற்குமான ஒன்று என மார்க்ஸ் குறிப்பிடுகின்றார்.

இயற்கை, மனிதன், இனமனிதன் என்ற வேறுபாடுகளை விளக்குவதற்கு மார்க்ஸ் ஆற்றல், தேவை என்ற இரு பிரதான பதங்களைப் பயன்படுத்துகிறார். இந்த பதங்களுக்குரிய மார்க்ஸிய விளக்கம் பரந்த அர்த்தத்தை உடையது. உதாரணமாக, மார்க்ஸ் ஆற்றலுக்கு மிகக் கிட்டியதாக இயல் ஆற்றல், செயல் நிலை, திறமை என்ற பதங்களைப் பிரயோகிக்கின்றார்(அனஸ் எம்.எஸ்.எம், 1999:274).

மார்க்ஸின் கருத்தில் தேவைகள் என்றால் ஒன்றை விரும்புவது, உணர்வது உடனடியாகக் கிடைக்கக் கூடியதல்லாததை விரும்புவது. மேலும், மனிதரில் இருப்பது தேவைகள் மட்டுமல்ல. அவற்றை அவர்கள் உணர்கின்றனர். அதாவது, தேவை அவர்களின் உணர்வு உந்துகளாக - தேவைகளாக - இருக்கின்றன. மார்க்ஸியத்தில் தேவை என்பது உந்து (Drive), வேணவா (Want) அல்லது கடுந்தேவை உணர்ச்சி ஆகியவற்றுடன் சமமாகக் கருதக் கூடியன. மேலும் மார்க்ஸின் திட்டத்தில் தேவை ஆற்றலுடன் சம்பந்தப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆற்றலும் குறிப்பிட்ட தேவையுடன் இணைக்கப்பட்டுள்ளது. தேவை பூர்த்தி செய்யப்படுவதற்கு ஆற்றல் பயன்படுத்தப்படுகிறது. இதனால் மார்க்ஸின் நோக்கில் தேவையும் ஆற்றலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படும் கூறுகள் எனக்கொள்ளப்பட வேண்டும்.

மார்க்ஸிய நோக்கில் மனிதத் தேவை தொடர்பான கருத்துக்களோடு - அர்த்தம் - (meaning), பெறுமானம் - (value) போன்றனவும் உள்ளார்ந்த தொடர்புடையன. இவை தேவை தொடர்பான வரையறைக்குள் அமைந்துள்ளன. மனிதப் பெறுமானம் மனிதர் தொடர்பான சித்தாந்தம் என்பவற்றில் அவர்களை சுயம்சார் நடுநிலையானவர்களாகவும் இயற்கை உயிரியாகவும் வாழ இவை உதவுகின்றன.

மனிதத் தேவை தொடர்பான உறுதியான அடிப்படை அத்தேவையின் பெறுமானத்தைக் கொண்டே அளவிடப்படுகின்றது. தேவையில்லாதவிடத்து, குறித்த விடயம் பெறுமானம் அற்றதாக மாறுகின்றது. குறிப்பாக மனிதனால் அந்நியமாக உணரப்படுகின்ற பெறுமானம் தேவையற்ற தாகின்றது. பெறுமானமும், அவசியமும் தொடர்புபடுகின்ற போதே ஒரு பொருள் தேவையாகின்றது. அத்தோடு இயற்கையும் பெறுமானத்தை தீர்மானிக்கின்றது. தேவைக்கும், மனித வரலாற்றின் விருத்திக்கும் இடையிலான அவசியத் தொடர்பை மார்க்ஸிய அணுகுமுறை தெளிவுபடுத்தியது (Istvan meszaros, 1979:192).

தேவைக்கும், மனித வரலாற்றின் விருத்திக்கும் இடையிலான அவசியத் தொடர்பை மார்க்ஸிய அணுகுமுறை தெளிவு படுத்தியது

வரலாற்றின் ஒவ்வொரு கட்டமும் அதற்குரிய சிறப்பு நிலையான தேவையை மனிதரில் ஏற்படுத்துவதாக மார்க்ஸ் கருதுகிறார். வரலாறு மற்றொரு கட்டத்திற்கு மாறும் போதும் இத்தேவைகள் காணாமற் போகின்றன. பழைய தேவைகளிடத்தில் புதிய தேவைகள் வந்து சேர்கின்றன. ஜேர்மன் கருத்தியலில் (German Ideology) மார்க்ஸ் தேவைகளின் உற்பத்தியும் மன நிறைவும் வரலாற்றுப் போக்கில் உள்ளதாக கூறுகிறார்.

மனிதனின் இயற்கை ஆற்றலை விலங்குச் செயற்பாடு என்றும் உடல் தேவை என்றும் குறிப்பிடுகிறார். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று சமனானவை அல்ல. எனினும் இவற்றுக்கிடையில் தொடர்புகள் உண்டு (Karl Marx and Engles, 1976: 71,79).

மனிதரை உயிர் வாழ வைப்பதற்கு விலங்குச் செயற்பாடு உதவுகிறது. உடற் தேவைகள் மனிதர் செயற்படுவதற்கும் அவர்களை உயிரோடு வைத்திருப்பதற்குமான செயலைப் புரிகின்றன.

இயற்கை ஆற்றல்களின் முக்கியமான பண்பு மனிதருக்குப் புறத்தேயுள்ள பொருள்களில் (Object) நிறைவைத் தேடுவது. இதற்கெனக் குறிப்பிட்ட உளவியல் நிலை காணப்படுவதை மார்க்ஸின் தேவைக் கருத்தாக்கம் காட்டுகிறது. மனிதரின் இயற்கை ஆற்றலில் குறிப்பிடத்தக்க இரு பண்புகள் உள்ளன.

1. மனப்போக்குகள்
2. திறன்கள்

இவை இரண்டும் உந்துகளாக அவர்களில் காணப்படுகின்றன. இரண்டாவது பண்பு அவை அவற்றின் நிறைவான பொருளில் உடம்புக்கு வெளியில் காணப்படுகின்றன.

மனிதன் புறத்தேயுள்ள பொருள்களில் நிறைவைத் தேடுகிறான். அல்லது அவனது இயல்பான நிலை அல்லது இயற்கை ஆற்றல்கள் அவ்வாறு அவனைத் தூண்டுகின்றன. இதில் "தேவை" யும் உடன் தொடர்பு கொள்கிறது. இது முக்கியமானதொரு கருத்தை நமக்கு உணர்த்துகின்றது. மார்க்ஸின் புறப்பொருள் (Object) பற்றிய அர்த்தத்தை இதில் காண முடிகிறது. மார்க்ஸ் புறப்பொருள் என்பதை (The Object

Of The Subject real or potential) என்ற பொருளிலேயே பயன்படுத்துகிறார் (அனஸ்.எம்.எஸ். எம், *1999:275*).

இதில் வெளிப்படையான பொருள், சடரீதியான புறப்பொருள் என்பதை விட மனிதத் தொடர்புக்குள்ளாகும் எந்த விடயமும் மார்க் ஸின் கருத்தில் புறப்பொருள் என்பதுதான் பொருள்.

இயற்கையாற்றல்கள், அதனுடன் தொடர்புபடும் தேவைகள் என்பன ஒரு மட்டத்தில் தூலமான பௌதிகத் தன்மை உடையனவாயினும் இன்னொரு மட்டத்தில் அவை அவ்வாறல்ல. இதனை மார்க்ஸ் உணர்ந்திருந்தார். மனிதரை மற்றொரு சிக்கலான உள நிலைக்கு இட்டுச் செல்வதை இவற்றிலிருந்து அவரால் தெளிவாக ஊகிக்க முடிந்தது. "மனிதன் துயருறுபவன்" என்ற மார்க்ஸின் கருத்தை இத்துடன் தொடர்புபடுத்தி புரிந்து கொள்ள முடியும். மனிதர் சில உளத்தாக்கங் களுக்குள்ளாக இயல்பிலேயே சந்தர்ப்பங்கள் உள்ளதாக மார்க்ஸ் கருதுகின்றார்.

மனிதன் இயற்கை உயிரி என்ற வகையில் துயருறுபவனாகவும் வரையறைக்கு உட்பட்டவனாகவும் நிபந்தனைக்குட்பட்டவனாகவும் இருப்பதை மார்க்ஸ் குறிப்பிட்டார். அவன் பெரும் துயர அனுபவங்களினால் அவன் துயருறுபவன் ஆகிறான். மார்க்ஸின் கருத்தில் புலன் உணர்வு உள்ளவனாய் இருப்பது துயருறுதலை கட்டாயப்படுத்துகிறது.

மனிதன் இயற்கை உயிரி என்ற வகையில் துயருறு பவனாகவும் வரையறைக்கு உட்பட்டவனா கவும் நிபந் தனைக்குட் பட்டவனாகவும் இருப்பதை மார்க்ஸ் குறிப் பிட்டார்.

மனிதன் இயல்பில் துயருறுபவன். ஏனெனில், அவனுக்குத் தேவை யானவற்றையெல்லாம் அவனால் பெற வாய்ப்பில்லை. தனக் குள்ள இயற்கை ஆற்றல்களினால் மனிதன் தனக்குத் தேவையானவற்றை எல்லாம் அடைந்து விட முடியாது. எதை அவனால் அடைய முடியாது ள்ளதோ அது உணவாகவோ தனக்கான உறவாகவோ எதுவாக இருந்தாலும் அவன் துயர் அடைகின்றான் (மேலது. *276*)

எனினும், தேவைக்கு மற்றொரு பரிமாணமும் உண்டு. மனிதர் தமது தேவைகளைக் கடந்து புதிய தேவைகளை உருவாக்கும் ஆற்றல் பெற்றவர்கள். புதிய தேவைகளுக்காக புதிய சாதனங்களை மனிதர் படைக்கின்றனர். இப்புதிய தேவைகளும் அவர்களால் உருவாகும் புதிய சாதனங்களும் மனிதரை மற்றொரு மேம்பட்ட பரிணாமத்திற்கு இட்டுச் செல்கின்றன. மேலும் அவர்களை மனிதராக்கக் கூடிய பாதையை அவை விரிவுபடுத்துகின்றன. இப்புதிய தேவைகள் மானிடச் செழுமையைப் படைக்கின்றன. எந்த அளவு முற்றிலும் மானிடத் தன்மை வாய்ந்த தேவைகளை படைக்கின்றார்களோ அந்த அளவு அவர்கள் விலங்குத் தன்மையை விட்டுக் கடந்து செல்கின்றனர். அவர்களது அறிவும் ஆற்றலும் உணர்வும் அதனால் விரிவு பெறுகின்றது.

### மனித சாரம்.

மனிதரை இன ஜீவி என்றும் (spcies being) மனித வாழ்வை இன வாழ்வு என்றும் மார்க்ஸ் குறிப்பிடுகின்றார். மனிதர் தமக்காகவேயுள்ளவர் என்ற பொருளில் அவர்கள் ஒரு இன ஜீவியாவர். தம்மைப்பற்றிய

சிந்தனையும் தம் இனத்தைப் பற்றிய சிந்தனையும் கொண்ட மனிதர் தம்மை ஒரு முழு இனமாகக் காணுகின்றனர். தம்மையும் தம் இனத்தைப் பற்றியும் சிந்திக்கின்ற இப்பண்பு மனிதரின் படைப்புச் செயலோடு சமபந்தப்பட்டது என மார்க்ஸ் குறிப்பிடுகின்றார். பார்த்தல், கேட்டல், முகர்தல், இன விருத்தி செய்தல் என்ற செயல்கள் மூலமாக மட்டுமல்ல, முக்கிய படைப்புச் செயல் மூலமாகவே மனிதர் தம்மை மனிதராக உறுதி செய்கின்றனர் என்ற மார்க்ஸின் சிந்தனை ஒழுக்கச் சிந்தனைக்குரியது. படைப்பாற்றலினாலேயே மனிதர் மனிதருக்கும் மிருகத்துக்குமுரிய பொதுவான இயற்கை ஆற்றல்களில் இருந்து தம்மை வேறுபடுத்துகின்றனர். அதாவது தம்மை மனிதராக வடிவமைத்துக் கொள்கின்றனர்.

படைப்பாற்றலினாலேயே மனிதர் மனிதருக்கும் மிருகத்துக்குமுரிய பொதுவான இயற்கை ஆற்றல்களில் இருந்து தம்மை வேறுபடுத்துகின்றனர். அதாவது தம்மை மனிதராக வடிவமைத்துக் கொள்கின்றனர்.

மிருக வாழ்வுக்கும் மனித வாழ்வுக்குமுள்ள பிரதான வித்தியாசம் மிருகம் நேரடியாகவே வாழ்க்கை நடவடிக்கையுடன் சேர்ந்தது என்பதும் அது தன்னிலிருந்து வேறுபடுவதில்லை என்பதுமே அதன் வாழக்கைச் செயல் என்றார் மார்க்ஸ். மனிதர் தம் விருப்புக்கும் தம் உணர்வுக்கும் பொருளாக வாழ்வுச் செயலைப் படைக்கின்றனர். இதில் உணர்வு வாழ்க்கைச் செயல் அடங்கியுள்ளது. ஒரு கட்டத்தில் மனித வாழ்வுச் செயலும் உற்பத்திச் செயலும் மிருகத்தனத்துக்குரியது தான். இன ஜீவிகளான மனிதரும் மிருகமும் சட உலகில் வாழ்வனவே. கல்லும், காற்றும், தாவரமும், ஒளியும் மட்டுமல்ல உணவும் உடையும் வீடும் கூட மிருகத்தைப் போல மனிதர் இயற்கையில் வாழ்வதை உறுதிப்படுத்தும்.

வாழ்க்கைச் செயலும் உற்பத்தி வாழ்வும் முதலாவதாக மனிதனுக்கு தோற்றமாவது தேவையை பூர்த்தி செய்யும் வெறும் கருவியாகவே (Karl Marx , 1977:73) என்று மார்க்ஸ் குறிப்பிடுகின்றார். ஒரு இன ஜீவியின் இயல்பு அதன் வாழ்க்கைச் செயலிலேயே அடங்கியுள்ளது. சுதந்திர உணர்வு நடவடிக்கையே ஓர் இன ஜீவியின் பண்பாகும் என்பது மார்க்ஸின் கருத்து.

மனிதன் உடனடியாகப் பெறுவது மிருக வாழ்வுச் செயலாகும். உண்பதோ குடிப்பதோ இனவிருத்தி செய்வதோ இதில் அடங்கும். ஆனால் மனிதனுக்கு உணர்வு வாழ்வுச் செயல் என்று வேறொரு பகுதியும் உண்டு. இப்பகுதியே மிருகத்திலிருந்து மனிதனை வேறுபடுத்துவதாக மார்க்ஸ் குறிப்பிடுகின்றார். அவன் இன ஜீவியும் அதனால் அவன் உணர்வு ஜீவியும் ஆவான். (Ibid, P:73).

அவர்களது இன வாழ்வே அவர்களுக்குரியது. இதனாலேயே அவர்களது செயல் சுதந்திரச் செயல் ஆகின்றது. அந்நியமான உழைப்புத்தான் இதில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இது அவர்களது வாழ்வு நடவடிக்கையை இருப்புக்கான ஒரு கருவியாகக் குறைத்து விடுகின்றது.

உலகப் பொருட்களைப் படைக்கும் போதுதான் மனிதன் தான் ஒரு உணர்வுள்ள இன ஜீவி என்பதை நிறுவுகிறான். மிருக வாழ்க்கை தரத்தில் இதை கணிப்பதெனின் மிருகங்கள் தனக்கு அவசியமானதை உற்பத்தி செய்வதைப் போல அதாவது கூடுகளையும் பொந்துகளையும் அமைப்பது போல எனக் கூறலாம். மனிதனின் நிலை இதில் இருந்து வேறுபட்டதாகும். பிராணிகள் தமக்கும் தமது உறவுகளுக்கும் உடனடியாகத் தேவையானதை மட்டுமே உற்பத்தி செய்கின்றன. ஆனால், மனிதனின் உற்பத்தி மற்றவருக்கும் உரியது. அது பிரபஞ்ச ரீதியானது (அனஸ். எம். எஸ். எம், 1991∴1992:66).

எனவே மனிதர்கள் அவர்களின் படைப்புச் செயலின் ஊடாக வடிவம் கொள்ளும் போது மிருக நிலை கடந்த மனிதர்களுக்கேயுரிய புதிய பரிமாணத்துக்கு வந்து சேருகின்றனர்.

இயற்கையை அறிவதிலும் இதர மனிதரோடு இணங்கி வாழ்வதிலும் தவிர்க்க முடியாத பெரும் பங்கினை மானிடச் செயல் கொண்டுள்ளது என்பதை மார்க்ஸின் சிந்தனைகள் எப்போதும் நிலைநிறுத்த முயன்றுள்ளன.

இயற்கை ஆற்றல்கள் மிருகத்துக்கும், மனிதருக்கும் பொதுவானவை. இயற்கை ஆற்றல்களில் மானிடப் பண்புகள் இல்லை. ஆயினும் இன ஆற்றல்களே மானிடப் பண்புகளைப் புதிய மனிதப் பரிமாணத்திற்கு இட்டுச் செல்கின்றன. அதனால் மனிதர் ஏனைய பிராணிகளிலிருந்து விடுபட்டு மனிதராக உயர்வடைகின்றனர். இந்த இன ஆற்றல்தான் மனித வாழ்வுக்கும் அதன் செழுமைக்கும் உதவுவதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் அமைகிறது. மானிடச் செயலை மார்க்ஸியம் வெறும் பொருளாதார அல்லது பௌதீகச் செயலாகக் குறுக்கி விடவில்லை இயற்கையை அறிவதிலும் இதர மனிதரோடு இணங்கி வாழ்வதிலும் தவிர்க்க முடியாத பெரும் பங்கினை மானிடச் செயல் கொண்டுள்ளது என்பதை மார்க்ஸின் சிந்தனைகள் எப்போதும் நிலைநிறுத்த முயன்றுள்ளன.

மானிடச் செயல் என்பதை வெறும் பொருளாதார செயல் என்று குறுக்குவதில்லை. தன் தேவைகளுக்கான சாதனங்களை படைப்பதன் மூலம் மனிதன் விலங்குத் தன்மையில் இருந்து விலகுகின்றான். மானிடத் தன்மையை நோக்கி நகர்கின்றான். உலகோடு உறவு கொள்கின்றான். சிந்தை ஆற்றலும் கற்பனை ஆற்றலும் வளர்கின்றன (ராஜதுரை எஸ்.வி, 1979:45).

### படைப்புச் சுதந்திரம்

உடனடித் தேவை என்ற பௌதிக ஆதிக்கத்திலிருந்து மனிதன் சுதந்திரமானதோடு அவனது "மானிடச் செயல்" ஒரு முக்கிய மாற்றத்தை பெறுகின்றது. "தன்னால் படைக்கப்பட்டவை" என்ற நிச்சயமான மனித முத்திரை பொறிக்கப்படுவதே அம்மாற்றமாகும். அவனது படைப்பில் அவன் காணும் சுதந்திரம் கற்பனையையும், நிறைவையும், அழகையும் தருகிறது. மனிதன் உணவுத் தட்டுக்களையோ உழைக்க உதவும் கருவிகளையோ பாவனைப் பொருட்களையோ வெறும் பௌதிக தேவையை நிறைவு செய்யும் கருவிகள் என்ற நிலையில் மட்டும் உருவாக்குவதில்லை. அவை செய்து முடிக்கப்பட்ட பொருட்கள்

மாத்திரமல்ல மனிதனின் அழகுணர்வும் சேர்ந்த ஒரு படைப்பு. அவை உடனடி பௌதீக தேவைக்கும் மேலான மதிப்பினைக் கொண்டவை (அனஸ். எம். எஸ். எம், *1991/1992:67*)

இங்கு ஒரு படைப்புச் செயல் கலைப் பண்பை பெறும் நிலை மனிதர்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் இருக்கின்ற நிலையிலேயே இடம்பெறும். அவர்கள் தமது சுதந்திர வெளியீட்டுக்கு அவகாசம் இருக்கும் வரை தான் அதனை செய்யத் தூண்டப்படுகின்றனர். சுதந்திரமற்ற மனிதரால் தமது அடிப்படைத் தேவைகளையே நிறைவு செய்ய முடியாத நிலையில் தமது மதிப்பு நிலைக்கான தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய மனநிலையிலிருந்து அவர்கள் தூரமாகின்றனர். மனிதர் தமக்குரிய பெறுமதியோடும் திருப்தியோடும் வாழ்கின்ற நிலையில் தான் அவர்களது உருவாக்கங்கள் “படைப்புக்களாகி” மனித வாழ்வியலில் நிலையான தன்மை பெறுகின்றன.

மனிதர் தமக்குரிய பெறுமதி யோடும் திருப்தியோடும் வாழ்கின்ற நிலையில் தான் அவர்களது உருவாக்கங்கள் “படைப்புக் களாகி” மனித வாழ்வியலில் நிலையான தன்மை பெறுகின்றன.

### முடிவுரை

இந்த வகையில் வரலாற்றின் ஒவ்வொரு கட்டமும் மனிதரின் தேவைக் கட்டமைப்பின் மாற்றத்தைக் கொண்டு வருகின்றது. ஒரு காலத்தில் தேவையாய் இருந்தவையும் அத்தேவைகளை உடையவரும் மறைகிறார்கள். புதியவர்களும், புதிய தேவைகளும் உருவாகின்றன. இங்கு காலகட்ட ரீதியில் தேவையிலேற்படும் மாற்றம் புதிய மனித முன்னேற்றத்தின் அடிப்படையாக அமைவதோடு, பிற்கால மானிட வாழ்வின் ஆற்றலிலும் அவர்களின் நிலையான தேடலிலும் மிக முக்கிய கூறாகவும் அமைகின்றது.

### உசாத்துணைகள்


Agnes Heller. 1974, The Theory of Need in Marx. London.

Henry Lefebvre. 1974, Sociology of Marx. London Penguin Books.

Istvan meszaros. 1979, Marx's theory of Alienation. London: Merlin press.

Karl Marx and Engels. 1976, German Ideology. Moscow: Progress Publishers.

…… 1977, Economic and Philosophic manuscripts of 1844, Moscow, Progress publishers.

அனஸ், எம்.எஸ்.எம்., *1999*, இளைய மார்க்ஸின் சிந்தனை, கலாநிதிப் பட்டத் திற்கான ஆய்வுக் கட்டுரை, பேராதனைப் பல்கலைக்கழகம் (பதிப்பிக்கப்படாதது)

............ *1991/1992*, மார்க்ஸிய மெய்யியல் எண்ணக்கருவும், ஒழுக்கவியல் அடிப்படையும்: இளங்கதிர், பேராதனை: பேராதனைப் பல்கலைக்கழகம், தமிழ்ச் சங்க வெளியீடு.

ராஜதுரை, எஸ்.வி., *1979*, அந்நியமாதல், மதுரை: க்ரியா பதிப்பகம்.